**மாலிம்பட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாலிம்பட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகார பிரதேசத்தில் சுடலை ஒன்று நிர்மானிப்பதற்கு 2001 வருடத்தின் பிரதான அமைச்சினால் கிடைத்திருந்த ரூபா 900,000 ஆன பணம் பெற வேண்டிய பணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) கொம்போஸ்ட் நிலையம் நிர்மானிப்பது தொடர்பான கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 101,602 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் தொகை ரூபா 18,561,731 ஆனதுடன், அதற்கு 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,031,386 வான 18 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் தொகை ரூபா 9,461,265 ஆனதுடன், அதற்கு 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,346,448 வான 23 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுமொத்தம் ரூபா 30,024,362 ஆன 41 காணி மற்றும் கட்டிடங்களுக்கான உரித்துரிமையும், மொத்தம் ரூபா 2,650,027 ஆன 06 வைப்புகள் தொடர்பில் விரிவான பட்டோலையும், சமர்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக பரிசீலனை செய்ய முடியாமல் இருந்தது.

## 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள்** | **இணக்கமின்மை** |
|---|---|
| **(அ)** 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 152(1) (அ) பிரிவு | வீத வரி செலுத்துவதை புறக்கணித்துள்ள வாடகைகாரர் தொடர்பான பட்டியல் மற்றும் ஆதன தடை செய்யும் பிடியானை பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு பாதீட்டுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவு, மிகை மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை |
| **(இ)** இலங்கை குடியரசின் நிதிப்பிரமானக் கோவையின் நிதிப்பிரமானம் 571. | 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 88,282 ஆன செலுத்த வேண்டிய பாதுகாப்பு மற்றும் நாநாவித வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,527,409 ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,450,103 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,077,306 ஆன வளர்ச்சி காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினங்களில் ரூபா 3,033,529 அதிகரித்தல் காட்டப்பட்டதுடன், மொத்த மீண்டுவரும் செலவினம் மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 86 சதவீதம் ஆனது. சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவு உயர் பெறுமானத்தை பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம், வருமான உதவி மற்றும் சுய சம்பாதிப்பு வருமானம் போன்ற மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 32,558,032 | 17,803,072 | 14,754,960 | 28,030,623 | (13,275,663) |
| 2014 | 28,447,197 | 14,545,240 | 13,901,957 | 24,997,094 | (11,095,137) |
| 2013 | 19,303,207 | 7,093,212 | 12,209,995 | 19,039,955 | (6,829,960) |

(இ) மீளாய்வாண்டில் வருமான உதவிகளில் போன்ற சுய சம்பாதிப்பு வருமானங்களில் வளர்ச்சியொன்று ஆனது.

(ஈ) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்து இருந்த போதிலும், அந் நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒவ்வொரு வருடத்திலும் சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்திற்கு மேலாக கனிசமான உயர் பெருமானத்தில் மீண்டுவரும் செலவு நிலவியதுடன், வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிக்கொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(ஊ) மேல் இலக்கம் (அ) தொடக்கம் (உ) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி நிலைமை தொடர்பில் சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கத்தை ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள நிலுவை வீத வரி மீதிகளின் 38 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 78 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன், நிலுவை வீத வரி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவையின் 12 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 44 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், நிலுவை ஏக்கர் வரி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதியின் 48 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், நிலுவை பணம் அறவிடல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

சபை நிதியத்தை ஈடுபடுத்தி 70 அபிவிருத்தி வேலை முன்மொழிவுகளை செயற்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும் 04 வேலை முன்மொழிவுகள் மாத்திரமே செய்யப்பட்டிருந்தன. சபையின் பிரதான காசேட்டின் படி மாதாந்த சாதாரன காசு மீதி ரூபா 5,859,564 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சபைக்கு போதிய பண வசதி இருந்த போதும் முன்மொழியப்பட்ட வேலைகள் செய்யப்படாமைனால் பிரதேச மக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவைகள் உரிய முறையில் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை மூலம் செய்யப்பட்ட கைத்தொழில்களிற்காக சபைக்கு சொந்தமான பெகோலோடரை பயன்படுத்தாது தனியார் நிர்வனமொன்றிற்கு சொந்தமான பெகோலோடர் ஒன்றை பயன்படுத்தி ரூபா 270,440 பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) லய்ட் டிரம்ஸ் ட்ரக் வண்டியின் கிரயத்திலும் ரூபா 2,490,400 கூடிய பெறுமதியில் காப்புறுதிப் பாதுகாப்பு பெறப்பட்டதன் காரணமாக ரூபா 76,136 தொகை கூடுதலாக செலுத்த வேண்டடியிருந்தது.

### 3.3 ஒப்பந்தக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகார பிரதேசத்தில் சுடலை ஒன்று நிர்மானிப்பதற்கு கிடைத்திருந்த ரூபா 900,000 பணத்தில் ரூபா 800,000 திறைசேரி உண்டியலில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீதி ரூபா 100,000 பணம் மீண்டுவரும் செலவுகளுக்காக பயன்படுத்துவதில் சம்பூரண நோக்கத்திற்கு மாற்றமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(அ) ஹொரகொட- முஸ்லிம்கொட பாதை அபிவிருத்தி வேலை 55 வாரங்கள் தாமதித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், தாமத காலத்திற்கு ரூபா 32,969 தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கழிவு பொருள் முகாமை

கழிவு பொருல் முகாமை தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபை செயலாளருக்கு உரித்தான காணியொன்றிற்கு சபையினால் கழிவு பொருட்கள் இடப்பட்டுக்கொண்டு இருந்ததுடன், 2016 ஜூன் மாதம் வரையிலும் அக் காணிக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டிற்கு கிலோகிராம் 5,250 கழிவு பொருட்களை வெளியிடும் கைத்தொழிற்சாலை ஒன்றிலிருந்து ரூபா 1,250 மாத வாடகை அறவிடப்பட்டதுடன், அதிகார பிரதேசத்திலுள்ள 17 கால்நடை உற்பத்தி விற்பனை நிலையங்களின் கழிவுகளை வெளி இடுவதற்டு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கழிவுப் பொருட்கள் முகாமை செயல் திட்டத்தின் முதற்கட்ட வேலைகள் 09 வாரங்கள் தாமதித்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், ரூபா 26,560 தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 08 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சிய ரூபா 147,166,203 ஆன செலவும், 07 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 144,373,508 மற்றும் இன்னும் ஓர் வருமான விடயத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விஞ்சி ரூபா 145,153 வும் ஆனமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலகருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பணவாக ரூபா 460,224 செலுத்தப்பட்டிருந்தன.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு செயளாற்றுகை

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பொது நிருவாகம் மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து 2014 திசெம்பர் மாதம் அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 6,009,600 ஆன லயிட் டிரம்ப் ட்ரக் வண்டி 2015 ஆம் ஆண்டில் கிலோ மீற்றர் 368 ஆன குறைந்த அளவு தூரமே செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 155,196 ஆன பங்களிப்பு பணம் மற்றும் அதற்குரிய மேலதிக கட்டணம் செலுத்துவதற்கு அல்லது பொறுப்பாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கணக்காய்வு ஐய வினாக்கள் மூலம் அடிக்கடி சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு.

(ஆ) வருமான சேகரிப்பு.

(இ) பாதீட்டு கட்டுப்பாடு.

(ஈ) கணக்கீடு.

(உ) ஒப்பந்த கட்டுப்பாடு.